
உ
சிவமயம்

# சிவபூமி

மாதாந்த செய்திப் பத்திரிகை
Monthly Journal of Sivapoomi

சிவம்-05 | சோபகிருது வருடம் கார்த்திகை திங்கள் அக்டோபர் 2023 | பூமி-09



## அர்த்தமுள்ள சடங்கு முறைகளை ஆளுக்கேற்றபடி மாற்றாதீர்கள்.



தற்காலத்தில் திருமண வீடுகளில் நான்காம் சடங்கு என்று கூறிக் கொண்டு பல உயிர்களை வெட்டி வீழ்த்தி, தாமும் உறவினர்களும் நண்பர்களும் பசியாற உண்பதையே பலர் வழக்கமாக கொண்டுள்ளார்கள். உன்மையில் அதுவல்ல அதன் அர்த்தம். திருமணமாகி சுமங்கலியான பெண் தனது வாழ்க்கை பயணத்தை எவ்வாறு தொடங்க வேண்டும் என்று நமது சைவப் பாரம்பரியம் பல விதிமுறைகளை தெளிவாக வகுத்து கொடுத்துள்ளது.

தொடர்ச்சி 02ம் பக்கம்

பூதாக்கலம் என்பது திருமணமாகி சுமங்கலியான பெண் தனது கணவனுடன் எவ்வாறு உணவு அருந்த வேண்டும் என்பது பற்றி மிக தெளிவாக பல விதிகளை சொல்லுகின்றது. பல வயதான சுமங்கலி பெண்கள் எவ்வாறு உணவுகளை தயாரிப்பது அதை எவ்வாறு பரிமாறுவது என்பது பற்றி புதிதாக திருமணமாகி சுமங்கலியான பெண்ணிற்கு கற்றுக் கொடுத்து வாழ்ந்தார்கள் நம் முன்னோர்கள்.

வாழை இலையிலே அன்னம் போட்டு அதன் பின்பு மருத்துவ குணம் உடைய பாகற்காய் போன்ற கறி வகைகளை வலப் பக்கமாகவும் ஏனைய சுவை மிக்க கறி வகைகளை இடப் பக்கமாவும் வைத்து பரிமாற வேண்டும் என்று நம் முன்னோர்கள் சுமங்கலி பெண்களிற்கு சொல்லிக் கொடுத்தார்கள். உடலிற்கு நன்மை செய்யக் கூடிய மருத்துவ குணம் உடைய உணவுகளை தனது கணவன் இலகுவில் எடுத்து உண்ணும் பழக்கத்தை இதன் மூலம் சொல்லிக் கொடுத்தார்கள். திருமணமான பல வயதான சுமங்கலி பெண்கள் முதல் முதலில் திருமணமாகி செல்லுகின்ற பெண்ணிற்கு உணவு தயாரிப்பது தொடக்கம் அதை பரிமாறுவது வரை பல விதிகளை தெளிவாக சொல்லி கொடுப்பார்கள்.

திருமணம் நடைபெற்று நான்கு நாட்கள் சடங்கு நடைபெற்றது. நான்காம் சடங்கோடுதான் அவர்களை தனிக் குடித்தனத்திற்கு அனுப்பினார்கள் நம் முன்னோர்கள். அந்த நான்கு நாட்களுக்குள் அந்த புதிய சுமங்கலிப் பெண் அறிய வேண்டிய தனது கடமைகள் பற்றியும் விதிகள் பற்றியும் பல வயதான சுமங்கலிப் பெண்கள் மிகப் பக்குவமாக சொல்லிக் கொடுப்பார்க்ள்.

மங்களகரமான நமது திருமண முறைகள் எல்லாம் தற்காலத்தில் நாகரிகம் என்ற போர்வையில் திசை மாறி நான்காம் சடங்கு என்றால் பல உயிர்களை வெட்டி வீழ்த்தி உறவுகளுக்கு விருந்து வைப்பது என்று தற்காலத்தில் மாறி விட்டது. இதற்கு அறியாமைதான் காரணம்.

சுமங்கலியான பெண் தனது வாழ்க்கை பயணத்தை மங்களத்தோடு ஆரம்பித்து வாழ்விற்கான பல வழிமுறைகளை சொல்லி கொடுத்த எமது பாரம்பரியங்கள் எல்லாம் தற்காலத்தில் சிதைவடைந்து சென்று விட்டன. எங்களுடைய சைத் திருமணங்களின் சடங்குகள் வெற்றிலையில் இருந்து தொடக்குகின்றது. வெற்றிலை என்பது மகாலட்சுமி ஆகும். திருமண நிச்சயதார்த்தத்தின் போது இரு வீட்டார்களும் வெற்றிலைகளை ஒருவருக்கொருவர் மாற்றிக் கொள்வார்கள்.

நாங்கள் இதயத்தாலே எமது உள்ளத்தாலே இந்த மங்களத்தின் அடையாளமாக உள்ள வெற்றிலையாலே நாங்கள் ஒருவருக்கொருவர் புரிந்து ஒரு குடும்பமாக வாழ்வோம் என்று திருமண நிச்சயதார்த்தம் நடைபெறுகின்றது. இதே வெற்றிலையினைதான் அர்ச்சனைக்கு பயன்படுத்துகின்றோம். நாங்கள்

**ஆசிரியர்**
கலாநிதி.செஞ்சொற்செல்வர்.
ஆறு.திருமுருகன்
**உதவி ஆசிரியர்**
திரு.ச.சந்தோஷன்
**வடிவமைப்பாளர்**
திரு.வ.குணநீதன்

உள்ளத்தாலே அன்னையே உன்னை வழிபடுகின்றோம் என்று உணர்த்துவதற்காக வெற்றிலையினை பயன்படுத்துகின்றோம். வெற்றிலையுடன் உள்ள பாக்கு சிவனும் சக்தியும் சேர்ந்தது. பாக்கு ஏதற்கு மங்களப் பொருளாக பயன்படுத்தப்படுகின்றது என்றால் அதிலே சிவனுடை சக்தியும் அம்பாளுடைய சக்தியும் உள்ளது. ஒவ்வொரு நாளும் அர்ச்சனையிலே வெற்றிலையும் பாக்கும் வைக்கப்படுகின்றது வெற்றிலையும் பாக்கும் மங்களப் பொருட்கள் என்பதுடன் சிவனையும் சக்தியையும் பிரிக்க முடியாது என்ற தத்துவத்தினையும் இது நமக்கு சொல்லி தருகின்றது.

சைவத் தமிழ் திருமணங்களிலே பெண்ணுடைய கழுத்திலே தாலி ஏறுகின்ற பொழுது எந்தவொரு அபசகுணச் சத்தங்களும் கேட்க கூடாது என்பதற்காக கெட்டி மேளம் ஒலிக்க தாலி கட்டப்படுகின்றது. ஒரு பெண்ணிற்கு சுமங்கலி என்ற உயர்ந்த அந்தஸ்தினை தரும் வேளையான தாலி கட்டும் நேரத்தில் எல்லோரும் கை எடுத்து கும்பிட வேண்டும். நமது பண்பாட்டிலே திருமணச் சடங்கிலே திருமுறை பாடிய முறை எம்மிடத்திலே முன்பு இருந்தது. தற்காலத்திலும் இந்தியாவிலே காரைக்குடியிலே இந்த முறை முறையாக பின்பற்றப்பட்டு வருகின்றது.

”மண்ணின் நல்ல வண்ணம்
வாழலாம் வைகலும்
எண்ணின் நல்லகதிக்கி
யாதுமோர் குறைவிலைக்
கண்ணின் நல் ல.ஃதுறுங்
கழுமல வளநகர்ப்
பெண்ணின் நல் லாளொடும்
பெருந்தகை யிருந்ததே”

என தாலி கட்டப்படும் நேரத்திலே இந்த தேவாரத்தினை பாட வேண்டும். இந்த முறை நமது பண்பாட்டிலே முன்பு இருந்த ஒன்றுதான்.

யாழ்ப்பாணத்திலே தற்காலத்தில் திருமணங்களிலே கை எடுத்து கும்பிடுபவர்களை காண முடியவில்லை. மண மக்களின் பெற்றோர்கள்தான் பாவம் தமது பிள்ளைகள் நன்றாக வாழ வேண்டும் என்ற எண்ணத்துடன் கை எடுத்து கும்பிடுகின்றார்கள் ஏனையவர்கள் இதை செய்வதே இல்லை.

ஒரு அபசகுணமும் இல்லாமல் தாலி கட்ட வேண்டும் என்ற எமது பண்பாட்டிலே தற்போது தாலி கட்டும் போது வீடியோ புகைப்படம் எடுப்பவர்கள் பொறுங்கோ பொறுங்கோ என்று சொல்லுகின்றார்கள். அந்தப்

பக்கம் திரும்புங்கோ இந்தப் பக்கம் பாருங்கோ என்று கட்டளை இடுகின்றார்கள். மங்களகரமாக தாலி ஒரு பெண்ணின் கழுத்திலே ஏற வேண்டும் என்றே அக்கினி வளர்த்து பல சடங்குகள் செய்து திருமணத்தை ஏற்பாடு செய்யும் போது தாலி ஏறும் நேரத்தில் பல அப சகுணக் காரியங்களை படத்திற்காக நம்மவர்கள் செய்கின்றார்கள். ஆயிரம் காலத்து பயிராக இருக்கப் போகின்ற இந்த சுமங்கலி வாழ்வு எவ்வித குறைவின்றி இருக்க வேண்டும் என்பதற்காக பல சடங்குளை புரோகிதர்களை அழைத்து செய்யும் போது படம் வீடியோவிற்காக பலர் இன்று திசை மாறி நடக்கின்றார்கள்.

ஒரு பெண்ணிற்கு மங்களமான வாழ்வு கிடைக்கும் போது மங்களத்தின் அடையாளமாகிய குங்குமம் நெற்றியிலே வைக்கப்படுகின்றது. நெற்றியின் உச்சியிலே போடப்படுகின்ற குங்குமம் பார்வதியின் அடையாளம் ஆகும். பார்வதி தேவி நித்திய கல்யாணி, நித்திய சுமங்கலி ஆவாள். ஆனால் இந்த குங்கும பொட்டுகளை பல பெண்கள் தற்காலத்திலே குறுக்கி கொண்டே வருகின்றார்கள். அம்பாளை தேடி வருகின்ற மிகவும் வயதானவர்களை பார்த்தால் மிகவும் அழகாக பெரிய குங்கும பொட்டுடன் வருகின்றார்கள் ஆனால் இளம் பெண்கள் குங்கும பொட்டு நெற்றியிலே உள்ளதா என்று தெரியாத அளவிற்கு வருகின்றார்கள்.

குங்குமம் என்பது அம்பாளின் அடையாளமான மங்களப் பொருள் ஆகும். தேவர்கள் சாட்சியாக, தெய்வங்கள் சாட்சியாக, அக்கினி சாட்சியாக, அருந்ததி சாட்சியாக, பசு சாட்சியாக சுமங்கலிப் பெண் முதன் முதலில் தனது நெற்றியிலே குங்கும பொட்டினை வைக்கின்றாள். இது மிக மிக பெறுமதியானது. தற்காலத்தில் பல பெண்களிற்கு இதன் பெறுமதி தெரிவதில்லை சில பெண்கள் திருமணமான பின்பு நாகரிகம் என்று பொட்டு இல்லாமல் அமாவாசை நெற்றியுடன் திரிகின்றார்கள். அமாவாசை என்பது இருட்டு குங்குமம் என்பது பௌர்ணமி ஆகும். இன்று மங்களமான தெய்வ அம்சம் பொருந்திய குங்கும பொட்டின் பெறுமதியினை பல பெண்கள் அறியாமல் திரிகின்றார்கள். குங்குமம் என்பது பெண்களுக்கு பாதுகாப்பு மட்டுமன்றி அவர்களை வலிமைப்படுத்துகின்ற சக்தியும் கூட இதை தயவு செய்து பெண்கள் உணர்ந்து நடவுங்கள்.

திருமணங்களிலே எந்தவொரு அப சகுணங்களும் நடந்து விடக் கூடாது என்பதற்காக ஒவ்வொரு காரியங்களையும் விதிகளிற்கு அமைய நம் முன்னோர்கள் செய்து முடித்தார்கள். மண மக்களை வாழ்த்துகின்ற போது கூட மங்களமான வார்த்தை கொண்டு வாழ்த்த வேண்டும். தற்காலத்திலே வீடுகளிலும் மண்டபங்களிலும் இதயங்களை வரைந்து அதற்கு குறுக்காக அம்புகளை வரைந்து திருமண வாழ்த்து தயாரிக்கின்றார்கள். அம்பு என்பது யுத்த களத்திலே பயன்படுத்தப்படுகின்ற ஒரு ஆயுதம் ஆகும். மகிழ்சிகரமான மங்களகரமான நிகழ்வுகளிற்கு யுத்த களத்திலே உயிர்களை கொல்ல பயன்படுத்தும் ஆயுதமான அம்பினை வரைந்து நாகரிகம் என்ற பெயரிலே அப சகுண காரியங்களை செய்கின்றார்கள்.

திருமணங்களிலே என்னென்ன காரியங்களை செய்யலாம் எவற்றை செய்ய கூடாது என்ற சடங்குகள் சம்பிரதாயங்களை நம் பெரியவர்கள் வகுத்து வைத்தார்கள். அதையெல்லாம் தற்காலத்தில் நாகரிகம் என்ற பெயரில் மறந்து வாழ்வது பெரும் மன வேதனையான ஒன்றாக உள்ளது. ஒரு சுமங்கலிப் பெண்ணின் வாழ்வை மிக பக்குவமாக இறை வழிபாடுகளுடன் திருமணம் நடைபெற வேண்டும் என்பதற்காக நம் பெரியவர்கள் பல சடங்குகளை சொல்லி வைத்தார்கள்.

ஒரு பெண் சுமங்கலியான பின்னாலே ஆடவன் குனிந்து, சுமங்கலி பெண்ணின் கால்களை தொட்டு, பெண்ணின் பாதத்தினை தூக்கி, அம்மி கல்லிலே வைத்து, அம்மியுடைய வலிமை போல இந்தப் பெண்ணின் மனத் துணிவு வலிமை பெற வேண்டும் என்று ஆடவன் பிரார்த்திப்பதாக நமது பெரியவர்கள் சடங்குகளை வகுத்தார்கள். அதன் பின் சுமங்கலி பெண் தனது நாயகனுடன் அக்கியினை ஐந்து தடவைகள் சுற்றி வருகின்றாள். இதற்கு பஞ்ச யக்ஞம் என்று பெயர் வைத்தார்கள். இன்று தொடக்கம் கணவன் மனைவி ஆகிய நாங்கள் எமது வீட்டிற்கு வருகின்ற விருந்தினர்களிற்கு உணவளிப்போம் என்றும் வீட்டிற்கு வருகை தரும் முனிவர்கள், துறவிகள் போன்றவர்களிற்கு உணவளிப்போம் என்றும், எமது முதாதையர்களை நினைத்து அவர்களிற்கு செய்ய வேண்டிய கடமைகள நாங்கள் தவறாமல் செய்வோம் என்றும், ஒவ்வொரு நாளும் அமரத்துவம் அடைந்தவர்களை நினைத்து உணவினை படைப்போம் என்றும் மிருகங்கள் பறவைகளிற்கும் வீட்டில் உள்ள பசு போன்ற உயிர்களிற்கும் உணவு கொடுப்போம் என்றும், அக்கினியினை ஐந்து தடவைகள் சுற்றி வந்து ஐந்து சத்தியங்களை எடுக்கின்றார்கள்.

ஆனால் தற்காலத்தில் பல திருமணங்களிலே இதன் அர்த்தம் தெரியமால் வெறும் படப் பிடிப்பிற்காக வெறும் பொழுது போக்காக அக்கினியினை சுற்றி வருகின்றார்கள். நெருப்பு அதாவது அக்கினி என்பது மிகவும் பலம் பொருந்திய இயற்கை தெய்வம் ஆகும் அதன் மீது தேவ யக்ஞம், பித்ரு யக்ஞம், பூத யக்ஞம், மானுஷ்ய யக்ஞம், பிரம்ம யக்ஞம் என்ற ஐந்து சத்தியங்களை சுமங்கலி பெண் தனது கணவனுடன் எடுக்கின்றாள். சுமங்கலி பெண்கள் தங்களை போல ஏனைய பெண்களும் சுமங்கலியாக குறைவின்றி வாழ வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடன் வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

கண்ணகி பொட்டிழந்து, பூவிழந்து எல்லாம் இழந்து ஒரு அன்னிய நாட்டிலே போய் நிற்கின்றாள். ஆதரவற்று கண்ணகி நிற்கும் போது அவள் முன் தோன்றிய அக்கினி தேவதை நாங்கள் என்ன செய்ய வேண்டும் என கேட்கின்றது. மதுரையிலே என்னுடைய கணவனின் இறப்பிற்கு காரணமான பல

தீயவர்கள் இன்னமும் உயிருடன் இருக்கின்றார்கள் என்றாள் கண்ணகி. உடனே அக்கினி தேவதை நான் மதுரையை எரிக்கட்டுமா என்று கேட்டது. அதற்கு கண்ணகி பத்தினிப் பெண்கள் மங்களத்துடனும் குங்குமத்துடனும் இருக்கும் பெண்களிற்கு இடைஞ்சல் செய்யாதே, ஆலயங்களிலே பூசைகள் செய்து அனைத்து உயிர்களும் குறைவின்றி வாழ வேண்டும் என்று பிரார்த்திக்கும் பூசகர்களிற்கு ஒன்றும் செய்யாதே, குழந்தைகளை ஒன்றும் செய்யாதே, வயதான மூத்தோர்கள், உடல் ஊனமுற்றவர்களை ஒன்றும் செய்யாதே, தீயவர்கள் எங்கெல்லாம் இருக்கின்றார்களோ அவர்களை தேடிச் சென்று தண்டனை வழங்கு என்று சொன்னாள் கண்ணகி.

பார்ப்பனர், அறவோர், பசு, பத்தினிப் பெண்டிர், மூத்தோர், குழவி, எனும் இவரைக் கைவிட்டு, தீத் திறத்தார் பக்கமே சேர்க என்றாள் கண்ணகி. எங்களுடைய பெண்கள் எவ்வாறு உயர்த் உள்ளத்தோடு வாழ்ந்தார்கள் என்பதற்கு கண்ணகி ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளாள். கண்ணகி என்ற பெண் அம்பாள் என்ற தெய்வ நிலைக்கு உயர்ந்ததற்கு காரணம், தான் கொடிய துன்பங்களை அனுபவித்தாலும் சுமங்கலி பெண்களை ஒன்றும் செய்து விடாதே என்ற அந்த உயர்ந்த குணம் அவளை தெய்வ நிலைக்கு உயர்த்தி செல்கின்றது. கண்ணகி நீதி தேவதை மட்டுமல்ல தற்கால பெண்கள் அவளிடம் இருந்து நிறைய விடையங்களை கற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. அதனாலே எந்தவொரு பெண்ணிற்கும் துன்பம் வரக் கூடாது தன்னைப் போலவே ஏனைய பெண்களும் சுமங்கலியாக வாழ வேண்டும் என்று சிந்திப்பவளே உன்மையான பெண் ஆவாள்.


தனக்கு மட்டும் வாழ்வு வந்தால் போதும் என்று எண்ணாமல் தன்னைப் போலவே மற்றப் பெண்களும் சுமங்கலியாக வாழ வேண்டும் என்று எண்ணுவதே உயர்ந்த குணம் ஆகும். பண்புள்ள பத்திப் பெண் என்பவள் தனக்கு மட்டுமல்ல மற்ற பெண்களும் நல்ல வாழ்வு பெற வேண்டும் என எண்ணத்துடன் நடப்பாள். அத்தகைய பெண்களாக எங்கள் பெண்கள் வாழ எல்லாம் வல்ல சக்தி துணை நிற்க வேண்டும்.


நன்றி

ஆறு.திருமுருகன்,<br>
ஆசிரியர்<br>
சிவபூமி பத்திரிகை

## நயினாதீவு நாகபூஷணி அம்மனுக்கு கும்பாபிஷேகம்

அருள்மிகு நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேக நிகழ்வு வருகின்ற 24ம் திகதி நடைபெறவுள்ள நிலையில் வருகின்ற புதன்கிழமை கிரிகைகள் ஆரம்பமாகி 22.11.2023 - 23.11.2023 ஆகிய இரு தினங்களும் எண்ணைக்காப்பு நிகழ்வு இடம்பெற்று 24.11.2023 காலை 9.38 தொடக்கம் 11.20 வரையுள்ள மீன லக்கின சுபவேளையில் மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.







## *சிறப்பாக நடந்த திருமந்திர மாநாடு*

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவசித்தாந்தத் துறையும், அகில இலங்கை சைவ மகாசபையும் இணைந்து நடாத்திய, திருமந்திர ஆன்மீக மாநாடு, 28.10.2023 யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் சிறப்பாக நடைபெற்றது..







# உடைந்த பானையால் தப்பிய ஆடு

"பண்டிகை வரப்போகிறது. அதற்கு பலி கொடுப்பதற்கு தான் இந்த ஆட்டை கூட்டிச் செல்கிறேன்" என்று ஒரு குயவன் ஜென் குருவிடம் சொன்னான். "பலியா?" குரு வியப்புடன் கேட்டார். "ஆமாம் சாமி. தெய்வத்துக்கு திருவிழா அன்றைக்குப் பலி கொடுத்தால் விசேஷம். தெய்வம் மகிழ்ந்து வரம் கொடுக்கும். எல்லாம் சுபீட்சமாகயிருக்கும்" இதைக்கேட்ட குரு எழுந்தார். அந்த குயவனின் மண் பானையை எடுத்து ஓங்கித் தரையில் அடித்தார். பானை துண்டு துண்டாகச் சிதறியது. குயவன் கோபத்துடன் துறவியைப் பார்த்தான். துறவி நிதானமாகக் கீழே குனிந்தார். சிதறிய ஓட்டாஞ் சில்லுகளை ஒன்றுவிடாமல் அடுக்கினார். குயவனிடம் நீட்டினார். "என்ன இது?" என்றான் குயவன் கோபமாக. "உனக்குப் பிடிக்குமே, அப்பா?" என்றார் குரு. "என்ன உளறுகிறீர்கள். நான் கஷ்டப்பட்டு செய்த பானையை



உடைத்து விட்டு அது எனக்கு பிடிக்கும் என்று என்னிடமே நீட்டுகிறீர்கள். கேலியா? கிண்டலா? உங்களுக்கு பித்தா?" என்று ஆத்திரப்பட்டான் குயவன். "அப்படியெல்லாம் எதுவும் இல்லையப்பா. உண்மையான அன்புடன் தான் செய்தேன்." என்று குரு சிறிதும் பதட்டப்படாமல் சொன்னார். "நான் செய்த அந்தப் பானையில் என் உழைப்பு முழுவதும் அடங்கியிருக்கிறதே! அதை உடைக்க நான் எப்படிச் சம்மதிப்பேன்? இது எனக்குப் பிடிக்கும் என்று யார் உமக்குச் சொன்னது?" "நல்லது. ஆண்டவன் படைத்த ஓர் உயிரை கதறக் கதற வெட்டிக் கொன்று பலியிடலாம் என்று உனக்கு யார் சொன்னது? இதை இறைவன் மகிழ்ந்து ஏற்றுக்கொண்டு வரம் தருவான் என்று நீ எப்படி நம்புகிறாய்? எந்தத் தாய் தன் குழந்தை கதறுவதைக் கேட்டு சகிப்பாள்? எந்தத் தகப்பன் தன் குழந்தை கொல்லப்படுவதை விரும்புவான்?" என்று குருவிடமிருந்து அடுக்கடுக்காகக் கேள்விகள் பிறந்தன. குயவன் நிதானமாக ஆட்டின் கழுத்திலிருந்த கயிற்றை அவிழ்க்கத் தொடங்கினான்.



## தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோயிலில் மாவைக் கந்தன் வாழை வெட்டு

வரலாற்றுச் சிறப்புமிக்க மாவைக் கந்தன் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்திற்கு எழுந்தருளி வன்னி வாழை வெட்டு உற்சவம் 26.10.2023 இடம்பெற்றது

மாலை 6.30 மணியளவில் மாவைகந்தன் ஆலயத்திலிருந்து புறப்பட்டு 7.00 மணியளவில் துர்க்காதேவி ஆலயத்திற்கு எழுந்தருளி வன்னி வாழை வெட்டும் உற்சவம் இடம்பெற்றது.

அதன் பின் அங்கு நடைபெற்ற விசேட பூசைகளைத் தொடர்ந்து 8.30 மணியளவில் மீள மாவிட்டபுரம் ஆலயத்தை நோக்கிப் புறப்பட்ட கந்தப்பெருமான் 9.30 மணியளவில் ஆலயத்தை அடைந்தார்.

முருகன் கே.கே.எஸ் வீதியூடாக துர்க்காதேவி ஆலயத்திற்கு எழுந்தருளி மீண்டும் ஆலயம் நோக்கிப் புறப்பட்ட. தருணம் அடியார்கள் நிறைகுடம் வைத்து முருகப்பெருமானை வரவேற்றனர்.













தமது மாணவர்களை நெறிப்படுத்த யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஒரு முன்னுதாரணமான செயற்பாடு ஒன்றை ஆரம்பித்துள்ளது. "போலித்தனத்திலிருந்து நிதர்சனத்திற்கு"
மாணவர்களுக்கான தெளிவூட்டல் கருத்தரங்கின் முதலாவது அமர்வு
(10.11.2023) சபாலிங்கம் அரங்கில் இடம்பெற்றது. கலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் அவர்கள் வளவஆளரஆக கலந்து கொண்டு மாணவர்களுக்கு அரிய கருத்துக்களை வழங்கினார்.

# தெல்லிநகர் துர்க்கையம்மன் கோயிலுக்கு புதிய இணையதளம்

உலகப் புகழ் பெற்ற தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்திற்குரிய இணையத்தள சேயயினை, 07.11.2023 ஆரம்பித்து வைத்தார் தேவஸ்தானத்தின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி.ஆறு.திருமுருகன் அவர்கள்.

தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானம் என்பது தனித்து ஒரு வழிபாட்டு ஆலயமாக இல்லாமல் பல்வேறு சமூக நலத்திட்ட செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தி வரும் ஒரு சிறந்த சமூக நலன்சார்ந்த நிறுவனமாக செயற்பட்டு வருகின்றது.

இவ் தேவஸ்தானத்தின் பெருமைகள் மற்றும் தேவஸ்தானத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் சமூக நலத்திட்ட செயற்பாடுகள் தொடர்பில் உலகில் உள்ள சகல இன, மத, மொழி மக்களும் மிக இலகுவில் அறிந்து கொள்ளும் நோக்கில்,

தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்திற்குரிய புதிய இணையத்தள சேயயினை செஞ்சொற்செல்வர் கலாநிதி.ஆறு.திருமுருகன் அவர்களினால் 07.11.2023 ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.




உலகம் எங்கும் பரந்து வாழும் அன்னையின் அடியவர்கள் மிக இலகுவில் அன்னையின் பெருமைகள் மற்றும் அன்னையின் பெயரால் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து மிக இலகுவில் அறிந்து கொள்ள முடியும்.

மிகவும் கண்கவர் வகையில் உருவாக்கப்பட்ட இவ் இணையத்தளத்தின் முழுமையான வடிமைப்பினையும் தகவல்களையும் பார்ப்பதற்கு கணனியில் இருந்து,

https://www.Tellidurga.com என்ற முகவரிக்கு சென்று பார்க்க முடியும்.

# கோணோச்சரத்தையும் இந்தியா புனரமைக்க வேண்டும்

பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்க இலங்கை விஜயம் செய்த இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் திருக்கோணேச்சர ஆலயத்தில் வழிபாடு செய்தார். அதன்போது "திருக்கேதீஸ்ர ஆலயத்தை கருங்கல்லினால் இந்தியா புனரமைத்ததைப் போன்று வரலாற்றுத் தொன்மை மிக்க திருக்கோணேச்சரம் ஆலயத்தையும் புனரமைக்க இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். "என திருக்கோணேச்சரத்திற்கு விஜயம் மேற்கொண்ட இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனிடம் சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் ஆறு திருமுருகன் அவர்கள் வலியுறுத்தினார்.








## தலைநகர் சிறுவர்களை ஆற்றுப்படுத்தும் சிவபூமி

கொழும்பில் வாழும் சைவத்தமிழ்ச் சிறுவர்கள் சமய விழுமியங்களை மறவாது பின்பற்ற வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி கொழும்பு சிவபூமி நிலையம் பல்வேறு செயற்பாடுகளை நடாத்தி வருகிறது. அதன் ஒரு அங்கமாக திருமுறைப் பயிற்சிநெறி நடத்தப்பட்டு, பங்குபற்றிய சிறுவர்களுக்கு பத்திரம் வழங்கல் வைபவமும் நடைபெற்றது.





# அரங்கேற்றம்



சைவ மங்கையர் வித்தியாலயத்தின் முன்னாள்மாணவியும் சாயி ஸ்ருதிலயா கலைக்கூடத்தின் இயக்குனருமான
வைத்திய கலாநிதி, “கலை இளவரசி “சாயி லக்ஷ்மிலோகீஸ்வரனின் மாணவியும்,

சைவ மங்கையர் வித்தியாலயத்தில் தரம் 4 இல் கல்வி கற்கும் மாணவியுமான சக்திகாஸ்ரீகுமரனின் கர்நாடக இசை அரங்கேற்றம் 27.10.2023 அன்று சிறப்பாக பெற்றது.




இச் சிறு வயதில் அனைவரையும் தன் இன் இசையால் 3மணி நேரம் மெய்மறக்கச்செய்து பலரும் பாராட்டைப் பெற்ற இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதி ஆகச் “ செஞ்சொற்செல்வர் “ “ கலாநிதி “ ஆறு.திருமுருகன் அவர்களும் , மற்றும்கௌரவ விருந்தினர் ஆகச்
சைவ மங்கையர் வித்தியாலயத்தின் அதிபர் திருமதி. அருந்ததி
ராஜவிஜயன் அவர்களும்
கலந்து சிறப்பித்தனர்.






யாழ்ப்பாணம்,
வடமராட்சி,
துன்னாலை
வல்லிபுர ஆழ்வார்
ஆலயத்தில் தீபாவளி
தினத்தன்று 12.11.2023
நரகாசூரன் போர் இடம்பெற்றது.







# கீரிமலையில் யமசங்காரம்

வரலாற்றுச் சிறப்பு மிக்க கீரிமலை நகுலேச்சரர் ஆலயத்தில் ஐப்பசி இறுதி வெள்ளி தினமான 10.11.2023 மாலை இயமசங்காரம் இடம்பெற்றது.

எம் பெருமானுக்கு மாலை 3.30 மணியளவில் விசேட அபிஷேக பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து வெளிவீதிக்கு எழுந்தருளி இயமனை சங்காரம் புரிந்து அடியவர்களுக்கு அருள்பாலித்தார்.





# கந்தல் பொதி கிழவன்

அரண்மனையை ஒட்டி வசித்த பிச்சைக்காரன் ஒருவன், அந்த அரண்மனைக் கதவில் ஒட்டப்பட்டிருந்த அறிவிப்பைக் கண்டான்.

அதில், மன்னர் விருந்தளிக்கப் போவதாகவும், அரச உடை அணிந்து வருவோர் மட்டுமே அனுமதிக்கப்படுவர் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

பிச்சைக்காரன், தான் அணிந்திருந்த கந்தல் உடைகளை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்துக்கொண்டான்.

நிச்சயமாக அரசரும், அவருடைய குடும்பத்தினரும் மட்டுமே ராஜ உடை உடுத்தியிருக்க முடியும் என எண்ணினான்.

திடீரென அவனுக்குள் ஓர் எண்ணம்... அந்த மாதிரி எண்ணுகிற அளவுக்குத் தனக்குள் ஏற்பட்ட துணிச்சலைப் பற்றி யோசித்த போதே, அவனுக்குள் நடுக்கம் ஏற்பட்டது.

இருந்தாலும், தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, அரண்மனை வாசலை அடைந்தான்.

வாயிற்காவலனிடம், ""ராஜாவைப் பார்க்க வேண்டும்"" என்றான். அந்தக் காவலன், அரசரிடம் அனுமதி வாங்கி வந்தான்.

உள்ளே வந்த பிச்சைக்காரனிடம், ""என்னைப் பார்க்கவேண்டும் என்றாயாமே?"" என்றார் அரசர்.

""ஆமாம்! நீங்கள் அளிக்கும் விருந்தில் கலந்துகொள்ள எனக்கும் ஆசை.

ஆனால், என்னிடம் ராஜ உடைகள் இல்லை. என்னை அதிகப்பிரசங்கி என நினைக்காவிட்டால், உங்களது பழைய ஆடையை அளித்து உதவினால், அதனை அணிந்து கொண்டு விருந்துக்கு வருவேன்"" என்றான் மிகவும் பவ்வியமாக.

அதே நேரம், மன்னர் என்ன சொல்வாரோ என நடுங்கியபடி, அவரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

ஆனால் மன்னர், அவனுக்கு ராஜ உடை ஒன்றை வழங்கினார். அந்த உடையை உடுத்திக் கொண்டவன், கண்ணாடி முன் நின்று கவனித்தான் தோற்றத்தில் கம்பீரம் மிளிர்வதைக் கண்டு வியந்தான்!

அப்போது மன்னர் அவனிடம், ""விருந்தில் கலந்து கொள்வதற்குத் தகுதி உடையவனாகி விட்டாய்.

அதைவிட, முக்கியமான ஒன்று...
இனி உனக்கு வேறெந்த உடையும் தேவைப் படாது.

உன் ஆயுள் முழுவதும் இந்த உடை அப்படியே இருக்கும். துவைக்கவோ தூய்மைப் படுத்தவோ அவசியம் இருக்காது"" என்றார்.

கண்ணீர்மல்க, மன்னருக்கு நன்றி கூறி விட்டுக் கிளம்ப யத்தனித்தவன்,
மூலையில் கிடந்த தனது பழைய ஆடைகளைக் கவனித்தான்.

அவனது மனம் சற்றே சலனப்பட்டது.

"ஒருவேளை, அரசர் கூறியது தவறாக இருந்து, இந்த உடைகள் கிழிந்து விட்டால்... அப்போது நமக்குப் பழைய உடைகள் தேவைப்படுமே?!" என யோசித்தவன், சட்டெனச் சென்று தன் பழைய உடைகளை வாரிக் கொண்டான்.

வீடு வாசல் இல்லாத அவனால் பழைய துணிகளை எங்கேயும் வைக்க முடியவில்லை எங்கே போனாலும் பழைய ஆடைகளையும் சுமந்தே திரிந்தான். மன்னர் அளித்த இரவு விருந்தையும் அவனால் மகிழ்ச்சியாக ஏற்க முடியவில்லை.

அடிக்கடி கீழே விழுந்து விடும் பழைய துணிகளைச் சேகரிக்கும் மும்முரத்தில், பரிமாறப்பட்ட பதார்த்தங்களைச் சரிவர ருசிக்க முடியவில்லை.

அரசர் சொன்னது உண்மை என்பது நாளடைவில் அவனுக்குப் புரிந்தது.
அவர் கொடுத்த ஆடை அழுக்காகவோ, கிழியவோ இல்லை. ஆனாலும், அந்த யாசகனுக்குப் பழைய உடைகள் மீது நாளுக்கு நாள் பிடிப்பு அதிகமானது.

மக்களும் அவனது ராஜ உடையைக் கவனிக்காமல், அந்த கந்தல் மூட்டையையே பார்த்தனர்.

அவனைக் "கந்தல் பொதி கிழவன்" என்றே அழைத்தனர்.

இறக்கும் தருணத்தில் இருந்த அவனைப் பார்க்க, அரசர் வந்தார். அவனது தலைமாட்டில் இருந்த கந்தல் மூட்டையைப் பார்த்து, அரசரின் முகம் சோகமாவதைக் கண்டான். ஆரம்பத்திலேயே அரசர் சொன்ன செய்தி நினைவுக்கு வந்தது.

பழைய துணி மூட்டை, அவனது வாழ்நாளின் மொத்த

மகிழ்ச்சியையுமே பறித்து விட்டது. அந்த யாசகனிடம் மட்டுமல்ல, நம் எல்லோரிடமும் அப்படியொரு மூட்டை இருக்கிறது.

அதனுள் விரோதம், கோபம், கவலை, சோகம், பகைமை... எனப் பல பெயர்களில் வேண்டாத பொருட்கள் இருக்கின்றன. அவற்றைப் பாதுகாப்பதிலேயே கவனம் செலுத்துவதால், நமது வாழ்வில் வீசுகின்ற மகிழ்ச்சித் தென்றலை நுகர முடியாமல் இருக்கிறோம்.

நம்முடைய தீராத கோபம், எத்தனை இன்பம் வந்தாலும், அதை ஏற்றுக் கொண்டு ஆனந்தப்பட முடியாமல் செய்து விடுகிறது. அரண்மனைகளில் கூட, இன்றும் பலர் பிச்சைக்காரர்களாகவே வாழ்கின்றனர்.

அனாதை ஆஸ்ரமங்களில் அரசர்களாக வாழ்வோரும் உண்டு. மனதில் இருக்கிறது மகிழ்ச்சி. வாழ்க்கை தினமும் நமக்கு புதுத் துணிகளை நெய்து தருகிறது. நமக்கோ, பழைய துணிகளில் ஒரு நூலைத் தூக்கி எறியவும் மனமில்லை.

நம் வீடுகளில், என்றோ வாங்கிய பல பொருள்கள் நிரம்பி இருக்கின்றன.
அவற்றால் எந்தப் பயனும் இல்லாவிட்டாலும், தூக்கி எறிய மனமில்லை. வீட்டையே குடோனுக்கு இணையாக மாற்றிக் குடித்தனம் நடத்துபவர்களும் இருக்கின்றனர்.

இல்லத்தை மட்டுமல்ல, உள்ளத்தையும் குடோனாக்கி பழைய சரக்குகளைப் பத்திரப்படுத்தினால், அவற்றின் அழுகல் நாற்றம் உதடுகளின் வழியே சொற்களாகவும் கரங்களின் வழியே செயல்களாகவும் வெளிப்பட்டு வேதனையையே விநியோகிக்கும் வெளிச்சத்தை வழங்காது. மகிழ்ச்சியாக இருப்பதற்குக் காரணங்கள் தேவையே இல்லை. மகிழ்ச்சியாக இருப்போம்...

## சிவபூமி மாணவன் தேசியரீதியில் முதலிடம்.

இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் நடைபெற்ற ,தேசிய ரீதியிலான மாற்றுவலுவுடையோருக்கான (விசேட தேவையுடைய) நடனப்போட்டியில் எமது பாடசாலையை சேர்ந்த செல்வன் அலெக்ஸ்சாண்டர் நிருசன்ராஜ் முதாலாம் இடத்தை பெற்றுக்கொண்டார். வாழ்த்துக்கள்




## திருச்செந்தூரில் செஞ்சொற்செல்வர்

தமிழ்நாடு திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் நடைபெற்று வரும் கந்த“டி திருவிழாவில் இலங்கை சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் ஆறுதிருமுருகன் நேற்று 14ம் திகதி “இலங்கையில் முருக வழிபாடு” என்ற தலைப்பில் ஆன்மீக அருளுரை நிகழ்த்துவதையும், அங்கே அவருக்கு வழங்கப்பட்ட சில கௌரவங்களையும் படங்களில் காணலாம்



